உ

சிவமயம்




நாளென்செய்யும் வினை தாளென்செயுமெனை நாடிவந்த
கோளென்செயுங்கொடுங் கூற்றென்செய்யுங்குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங்கடம்பு மெனக்குமுன்னே வந்து தோன்றிடினே.

# திரு. தேவரத்தினம் (ராசன்)
# நவரத்தினம்

இறைவன் திருவடிநீழல் எய்தியமை குறித்து
வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

பிரமாதீச வருஷ தை மீ 28 உ (10-2-74)



7-5-1947. 11-1-1974.

உ
சிவமயம்

## தேவாரம்

### கோயில்

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

### திருப்பாதிரிப்புலியூர்

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திருப்புலி யூரரனே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற் கங்கைசெஞ்சடைமேல்வைத்த தீவண்ணனே.

### சுத்தாங்கம்

கருவுற்ற நாண்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றெ னுள்ள மு நானுங் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற் றிலாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

## திருவாசகம்

கடையவ னேனைக் கருணையி
னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டாய்விறல் வேங்கையின்றோ
லுடையவ னேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி
ரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

## திருமந்திரம்

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பட்டினத்தார் பாடல்

என் செய லாவது யாதொன்று
மில்லை இனித் தெய்வமே!
நின்செய லேயென் றுணரப்பெற்
றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று
மில்லைப் பிறப்பதற்கு
முன் செய்த தீவினை யோவிங்ங
னேவந்து மூண்டதுவே.

## புராணம்

புன்னெறி யதனிற் செல்லும்
போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து
நவையறு காட்சி நல்கி
என்னையு மடிய ணுக்கி
யிருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்
பாதபங் கயங்கள் போற்றி.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## திருநந்திதேவர் சிவபெருமானிடத்திற் கேட்டுக்கொண்ட சில வரங்கள்

ஆமளவும் சிவமறவா திருத்தல் வேண்டும்
அடியேன்தன் விண்ணப்பம் ஆக்கம் முத்தி
சாமளவுஞ் சஞ்சலமற் றிருத்தல் வேண்டும்
சாம்பொழுது நோயின்றிச் சாதல் வேண்டும்
போமளவில் நாயடியேற் கெதிரே வந்து
புகுந்தாயோ வெனவெண்ணிப் புகுத்த போது
கோமளவல்லி யுநீயும் இருக்குங் கோலம்
கும்பிட நான் வரவேண்டுங் கூத்த னாரே.

உ

சிவமயம்

# "தோன்றிற் புகழொடு தோன்றுக"

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகள்
ஆதீனகர்த்தர், நல்லை. ஞானசம்பந்தர் ஆதீனம்

உலகில் பூதவுடல் அழிவது. ஆனால் புகழுடம்பு என்றும் அழியாதது. ஆண்டவனே தியாகத்தின் சிகரமாக 'தியாகராஜா' என்ற நாமத்துடன் திகழ்வது சான்று. அத்தகைய தியாகியாக இன்று அமரரான செல்வன் தேவரத்தினம் (ராசன்) அவர்களை தமிழ் உலகம் என்றும் மறக்க முடியாது. ஈழத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய உலகப் பிரசித்தி பெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில், இறுதி நாளில் செந்தமிழ்த் தியாகியாய், தன் உயிர் ஈந்த தியாகச் செம்மல் வீரமரணம் எய்தினாலும், அவரது தியாகம், புகழ் சரித்திரம் உள்ளளவும் பேசப்படும். அவரது ஆன்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக.

### மன்னு உலகத்து மன்னுபுகழ் நிறுவிய

# தேவரத்தினம் நவரத்தினம்

**பேராசிரியர் சு. வித்தியானந்தன்**
*இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவரும்*
*அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளைத் தலைவரும்.*

விளக்க முடியாத நிகழ்ச்சி; ஆனால் ஒவ்வொரு நாளும் இடம்பெற்றுக்கொண்டே வருகின்றது. இனியவரை, தொண்டரை, பிறருக்கென வாழ்பவரை உலகிலே சில்லாண்டு வாழவிட்டு இறைவன் தன்னோடு அணைத்துக் கொள்கின்றான். இராஜன் அவர்களும் அத்தகையோரில் ஒருவர்.

இராஜனை நான் முன்பின் அறியாதவன். தகப்பனின் மருந்துச்சாலையிற் பலதடவை கண்டதுண்டு. இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் பார்ப்பதற்கு யாழ். வைத்தியசாலைக்குச் சென்றபோது சத்திர சிகிச்சை பெற்று அவர் உயிரோடு போராடிக் கொண்டிருப்பதைக் கவனித்தேன். இந்த வயதில் இத்தகைய பயங்கர நிலை இவருக்கு ஏற்பட இவர் என்ன தவறு செய்தார்? பொலிசாரால் அநியாயமாகத் தாக்கப்பட்டு, பஸ் நிலையத்திற்கு ஓடி வந்து, அங்கும் பொலிசாரின் அட்டூழியத்திற்கு உட்பட்டு அவஸ்தைப்படும் மக்களுக்கு உதவி செய்ய முன்வந்த இத்தொண்டனை நாம் இழந்துவிட்டோம். தமிழ் இனத்தின் நலனுக்குத் தன்னை அர்ப்பணித்த ஒருவர், எத்தனையோ சேவைகள் மக்களுக்குச் செய்யக் கோட்டைகள் கட்டியிருந்தார். அவர் பெற்றோரும் அவரால் தாம் உயர்வு பெற, தமிழ் இனம்

பெருமை அடைய எதிர்பார்த்திருந்தனர். ஆனால், அவர் மக்களுக்காகத் தியாகம் செய்து மன்னுபுகழ் நிறுவி மறைந்து விட்டார்.

மிருகத்தனமாகப் பொலிசாரால் தாக்கப்பட்ட பொதுமக்களுக்குத் தன்னுயிரைத் தியாகம் செய்த இராஜன், மக்களில் இரத்தினமாகப் பிரகாசித்துத் தேவருள் இப்போது இரத்தினமாக ஒளி வீசிக் கொண்டிருக்கின்றார். 12ம் திகதி மாலை மயானத்தில் இறுதி மரியாதை செலுத்திவிட்டுத் திரும்பும்போது, இராஜனின் மைத்துனர் என்னைக் கட்டியணைத்து, ''சேர், ஓர் உயிர்ப்பலி கொடுத்து விட்டோம்; தமிழுக்கு இனி என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்'' என்றார். 10ம் நாள் இடம் பெற்ற உயிர்ப்பலிகளினால் உள்ளங் கலங்கிச் சோர்வுற்றிருந்த எனக்கு, தமிழரின் எதிர்காலத்திலே ஒரு நம்பிக்கை தோன்றியது. தமிழ் இனத்தைக் காட்டிக் கொடுக்கவும், தமிழ் இனத்தை உயிர்ப்பலி கொள்ளும்படி ஏவவும் துரோகிகள் மலிந்துள்ள எமது சமுதாயத்தில் இராஜனைப் பிஞ்சு வயதிற் பறி கொடுத்த பின்னும் தியாகம் செய்யக் காத்திருக்கின்ற அவரின் மைத்துனர் போன்றோரும் நிறைய இருக்கின்றார்கள் என மனதைத் தேற்றிக்கொண்டேன்.

ஈழத்துத் தமிழ் இனத்தின் தியாகி இராஜனின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

# 'ஆன்மசாந்திக்குப் பிரார்த்திப்போம்'

வி. மு. பேரம்பலம்
பட்டயம் பெற்ற கணக்காய்வாளர்

சென்ற ஐந்து வருடங்களாக திரு. தேவரத்தினம் எங்களுடன் வேலை செய்துள்ளார் இவரை. எல்லோரும் ''ராஜன்'' என்று அழைப்போம். இவரிடம் இக்கால வாலிபர்களிடம் காணமுடியாத பல நற்குணங்கள் இருந்தன. எந்தச் சிறிய வேலை என்றாலும் புன்முறுவலுடன் செய்யும் சுபாவமும்; கூட்டு முயற்சிகளை முன்னின்று ஏற்பாடு செய்யும் ஆற்றலும்; தன் பிழைகளை உணர்ந்து ஏற்றுக்கொள்ளும் பண்பும்; செய்வன திருத்தமாகவும், சுத்தமாகவும், சுறுசுறுப்பாகவும் செய்யும் பயிற்சியும், தனது வசதிக்காக நடக்காமல், மற்றவர்களுடைய வசதியையும் உணரும் நாகரீகமும் அவரிடம் இருந்த நற்குணங்களிற் சிலவாகும்.

இவரது மரணத்தை முதன்முதலில் கேள்விப்பட்ட பொழுது ஆகாயத்தில் பறக்கும் விமானம் நிலத்தில் விழுந்து நொருங்கிச் சாம்பலானது போன்று இருந்தது.

இவர் வாழ வேண்டிய வயதில் மாண்டது பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த பெற்றோருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் ஆற்றொணாத் துயரம் தான். என் செய்வது? மனிதரின் வாழ்க்கைச் சுருளைப் படைக்கும் இயற்கை மாதா ஒவ்வொருவரினதும் வாழ்க்கைச் சுருளையும் ஒவ்வொரு மாதிரிப் படைத்து விடுகிறாள். ராஜனின் வாழ்க்கைச் சுருளை மிகவும் சிறியதாகப் படைத்து விட்டாள். இவ் வேறுபட்ட படைப்பின் காரணத்தைத்தான் நம் முன்னோர் தத்தம் வினை என்றனர் போலும்.

ராஜனின் ஆன்மா சாந்தியடைய நாங்கள் பிரார்த்திப்போமாக!

உ

முருகன் துணை

தாய்மொழியாம் தமிழ்மொழி காக்க முன்வந்து
தாக்குண்ட மக்களின்
இன்னுயிர் காக்க முனைந்து
தன்னுயிர் நீத்த உயிர்த்தியாகி
யாழ் / ஆனைப்பந்தி ந. தேவரத்தினம் (ராசன்)
அவர்களின்

# வீரமரண ஆன்மசாந்தி

## வெண்பா

மாநாட்டிற் தாக்குண்ட மக்களுயிர் மீட்பதற்காய்
சேய்நாட்டுச் செந்தமிழைத் தேனமிர்தக் — காளையென
இச்சித் துயிர் நீத்த இன்குணவான் ராஜனுயிர்
அர்ச்சித்தற் காம் பொருளே யாம்.

## ஆசிரியப்பா

உலகெலாம் புகழ்பெறும் உத்தம மொழிகளுள்
நிலவிய இலக்கிய இலக்கண வரம்புடைத்
தமிழ்மொழிக் கீடாச் சாற்ற மறுமொழி
இமிழ்கட லுலகில் இலையென லாகும்.

அதனா லன்றோ அலைகடற் கப்பால்
ஐரோப் பாவிலும் அமெரிக் காவிலும்
அனைத்துல கத்திலும் அறிஞர்வா ழிடந்தொறும்
தமிழ்மொழி ஆய்வுகள் தாம்நிகழ் கின்றன.
அனைத்துல கத்தமிழ் ஆராய் கழகம்

எனவொரு கழகம் இயங்க முடிந்தது
நான்காந் தமிழ்மா நாட்டை நடத்த
யாழ்நகர் மக்கள் எத்தவம் செய்தனர்!
ஆயினும்;
மக்கள் வெள்ளம் மாவட்ட மெங்கும்

திரம்பி வழிந்த நீள்நாள் இறுதியில்
நிகழ்ந்த சம்பவம் நெஞ்சை எரிக்கும்
அகம்கன லாக அழுத கண்ணீர்
வழியக் கதறி யழுதது யாழ்நகர்;
அந்நாள் தன்னில் அருந்தொண் டாற்றிய
இளைஞர் செய் தியாகம் எழுத்தி லடங்கா
அன்னோர் பலருள் அரும்பெறற் குணவான்
கடவுட் பத்தி கடமை உணர்ச்சி
இனிய சுபாவம் ஏழைமீ திரக்கம்
இனசன அன்பு இறைவிழா ஆர்வம்
எல்லோரும் இனியனென் றேத்திடும் மாண்பு
பெற்றோர்ப் பேணல் பெரியோர் மதிப்பு
உற்றார் உறவினர்க் குதவிசெய் மேன்மை
அனைத்தும் நிரம்பிய அரும்பெறற் செம்மல்;
இத்தலம் புகழும் இராச வாசல்
முதலியார் பொன்னம் பலத்தின் பேரன்
நவரத் தினமும் அவர்தம் பத்தினி
ஞான தேவி நற்றமிழ்ச் செல்வி
பொன்னை யாதரும் புனிதையும் முன்னாள்
தன்ன ரியற்றிய நற்றவப் பயனாய்
வந்தவ தரித்த மாண்புசேர் புதல்வன்;
ஞான ரத்தினம் மாலினி தமக்கு
அரும்பெறற் சோதர னாக வந்தவன்;
மைத்துனர் கந்த சாமியை சிறார்கள்
ஜனனி வாணியை சீரார் மருமகப்
பேறுக் கொண்ட பெரும்புக ழாளன்.
பேரம் பலமன் கோவேனு திலையக்
கணக்காய் வாழக் கடமை புரிந்தோன்,
ராஜன் என்னும் எழிற்பெயர் கொண்டோன்
அன்னோன் செய்கை அகத்தை உருக்கும்

தமிழா ராய்ச்சி மாநாட் டினிறுதி
நாளில் நிகழ்ந்த துயர்தரு நிகழ்ச்சியால்
செய்வ தறியாது திகைத்த மகளிர்
சிறுவர் சிறுமியர் தம்மைக் காக்க
உயிரைத் திரண மாக மதித்து

மக்களைக் காக்க முனைந்த போது
வாயு வேகக் கதியில் வந்த
பஸ்சால் தன்னுயிர் போகினும் போகென
மன்னுயிர் காக்கத் தன்னுயிர் நீத்த
மாபெருந் தியாகிநீ மாண்டாயோ அல்லை.

என்றும் மக்கள் உள்ளத் திருப்பாய்
நின்னை இழந்த நீள்துய ராலுன்
தந்தையோ தாயோ தமையனோ தமக்கையோ
மைத்துனர் மருகியர் மற்றுமுள் ளோரோ
கவலுதல் மடமை; கவினுர் தியாகச்

செம்மலைப் பெற்றிவ் வுலகுக் கீந்த
பேற்று ளுள்ளம் பெருமிதங் கொள்க,
தமிழ்த்தாய் மகிழ்ந்து தன்னரும் புதல்வன்
அமிழ்துவா முலகில் அருந்தொண் டாற்ற
அழைத்துச் சென்றனள் போலும் அன்பினுல்.

உடம்பார் அழிவர் உயிரார் அழியார்
உண்மை யீதுண்மை யதனு லாற்றுவம்
தேவ ரத்தினமே தேவர்விருந் தேயுன்
ஆன்மா சாந்தி அடையும் உண்மை
ஆயினும் தமிழ்த்தாய்ப் புதல்வர் நாமும்
வேண்டுதும் தாய்த் தமிழ் அருளா லுனதுயிர்
அடைக சாந்தி! சாந்தி! சாந்தி!

★★★

## செந்தமிழுக்கு உயிரீந்த செல்வன் 'ராசன்'

### ஆசிரியவிருத்தம்

செந்தமிழுக் (கு) உயிர்வழங்கிச் சீரியநல்
வரலாற்றில் பேரும் பெற்றே
அந்தமிலான் பாதமலர் அடைந்துவிட்ட
ராசனையார் மறக்கற் பாலார்?
முந்துதமிழ் வாழ்கின்ற காலமெலாம்
வாழ்ந்துநிற்கும் இளையோய் நின்னைச்
சிந்தனைசெய் பொழுதெல்லாம் செந்தமிழ்த்தாய்
மடிமீதுன் கோலம் தோன்றும்!

பிறர்நலமே பெரிதென்றே பேணிநிற்போய்
நின்னுயிரைப் பேறு யாகி
விறல்படைத்த நெஞ்சுடனே வீராநீ
தமிழ்க்குயிரை வழங்கிவிட்டாய்!
அறந்துறந்தார் செயலதனால் ஐயகோ
அநியாயம் ஓங்கு தம்மா!
திறன் படைத்த தீராநீ செய்பணிகள்
யார் செய்வார் தந்தைக் (கு) ஐயா!

தேனினைநற் செங்கரும்பைத் தித்திக்கும்
நறும்பாகைச் சிறந்த பாலை
ஊனினுலாம் உயிரதனை விடஇனிக்கும்
ஒண்டமிழுக் (கு) உயிரை ஈந்த
மானமுளோய்! அந்தையார் வருத்தமெலாம்
துடைத்து நின்ற மணியே, இன்று
வானவனாய் நின்றனையே வாழ்வறியா
இளஞ்சிங்கம் மடிந்த தையோ!

தேவரத் தினம் என்றே தெரிந்துனக்குப்
பெற்றோரும் செல்வ மாக
ஏவருமே இனிதழைக்கும் பெயரிட்டார்
இனிய தமிழ் அன்னைக் காகத்
தேவருல கேகினையே செந்தமிழுக் (கு)
உயிர்வழங்குஞ் செல்வர் தம்முள்
யாவருனை நிகர்த்திடுவார் யாவருனை
மறந்திடுவார் யாண்டுக் காண்போம்!

கதிருதிக்கும் முனமெழுந்து தந்தைகடன்
முறைபுரிந்து கலையும் ஆய்ந்து
துதிபுரிந்து நல்லையமர் செல்வனடி
தொழுதுருகும் தொழும்பு பூண்டோய்
மதிகுறைந்தார் வன்செயலால் மயங்கினையோ
மாண்டனையோ அன்றி யுன்றன்
விதிபுரிந்த சதியிதுவோ வெல்லுதமிழ்க் (கு)
உயிரளித்த வீரா! வீரா!

இந்திரசித் (து) அபிமன்னன் பகவத்சிங்
எழுதிருப்பூர்க் குமரன் என்போர்
வந்த மரும் வரிசைதனில் இடம்பெற்றான்
ராசனவன் வருந்தேல் மக்காள்!
செந்தமிழுக் (கு) உயிரீந்த செல்வனென்ற
பெரும்பெயருஞ் சேர்த்துக் கொண்டான்!
சிந்தையிலார் செயலொடுங்கும் காலம் வரும்!
செல்வன்பேர் திகழும் என்றும்!

★★★

# இதயக் குமுறல்

என்னருமை நண்பா! எங்கின்று சென்ருயோ?
இதயக் கடல்குமுறி ஏங்கிறது உன்பிரிவால்
சின்ன வயதில் சேர்ந்தொன்ருய் விளையாடிச்
சிரித்துக் கதைத்ததுவும் சேர்ந்து படித்ததுவும்
பின்னர் இளமைப் பொழுதிற் பலகதைகள்
பேசித் திரிந்ததுவும் பிரியாத பெருநட்பும்
இன்னும் மறையவில்லை; நீ மட்டும் இல்லையெனில்
இங்கிதனை நம்பிடவா? இதயம்தான் தாங்கிடுமா?
அன்பின் உறைவிடமாய் அமைந்திட்ட ஒரு அன்பன்,
அருங்குணத்தின் பெருங்குன்று, அறிவுமிகு பண்பாளன்,
துன்பத் துழல்வோரின் துயர்துடைக்க முன்னிற்போன்,
தூய்மை யுடன் இறையைத் தொழுதேத்திப் புவிவாழ்வோன்
இன்பத் தலைமோதும் இளவயதில் எம்மோடு
எந்தப் பெரும்பணியும் ஈடேற வந்துழைப்போன்,
என்பும் பிறர்க்குதவும் இன்பத் தமிழ்ப்பண்பில்
என்றும் மிளிர்தேவ ரத்தினம் எம்நண்பன் !
கன்னித் தமிழின் கவிஞய்ந்து யாழ்நகரில்
கலைமேவு தமிழ் ஆளச் சகியாது வெறிகொண்டு
சின்ன மதியுடையோர் செய்திட்ட தாக்குதலில்
செந்தமிழின் உயர்வுக்காய் உயிர்நீத்த தமிழ் இளைஞ!
உன்னை இழந்ததனுல் உயர்ந்ததுவோ தமிழின்று?
உள்ளத் தெழுதுயரம் ஓய்ந்திடுமோ? ஓய்ந்திடுமோ?
கன்னம் வழிகண்ணீர் இன்னும் வடிகிறதே!
காலம் கடந்திடினும் கோலம் கலைந்திடுமோ?

நண்பன்

மகேஸ்வரன் (மனே)

## "ஆற்றலில் மிகுந்த நண்பன்"

ஆங்கில நூல் கற்றுணர்ந்த அறிஞரோடு
அருந்தமிழின் சுவையுணர்ந்த அன்பர் சேர்ந்து
தேங்குசுவை செந்தமிழின் சீர்மை தன்னைத்
திறந்தவெளி அரங்கினிலே செப்பும்போது
ஆங்குநின்ற மக்கள்தம் உணர்ச்சி கண்டு
அறிவிலிகள் சகியாது தாக்கும்போது
ஏங்கிஇடர்ப் பட்டவர்க்கு உதவி செய்த
(இ)ராஜனே! இறையடிக்கோ ஏகிவிட்டாய்?

கோலமார் மஞ்ஞை ஏறும்
குமரனை நாளும் போற்றி
சீலமார் வாழ்வு வாழ
சிந்தனை செய்த நண்பா!
ஆலமே உண்ட ஈசன்
அவனியில் எமக்குத் தந்த
சீலமார் தமிழிற் கோநீர்
சிரசினைக் கொடுத் திட்டீரோ!

வெண்ணீற்று மேனி யோடும்
வெள்ளை சேருடை யினேடும்
கண்ணனின் கோயில் நண்ணி
கருத்தி ஞல்வணங்கிப் பின்னே
வெண்ணீறு கொண்டு வந்து
விருப்போடு எமக்குத் தந்தோய்!
தண்ணறுந் தமிழிற் கோநீர்
தலையினைக் கொடுத் திட்டீரோ!

விருந்துகள் நடத்தும் காலை
விருப்போடு உழைத்த நண்பா
திருந்திடற் கரிய தான
சிந்தனை கேட்ட நண்பா!
வருந்திட முடியா நல்ல
வார்த்தை யாலெமது நெஞ்சில்
இருந்திடும் உம்மை என்றும்
எண்ணியே வருந்து கின்றோம்.

அன்பினால் எம்மை ஆண்டோய்
ஆற்றலில் மிகுந்த நண்பா!
இன்பமார் கதைகள் கூறும்
(இ) ராஜனே! எங்கு சென்றாய்
என்புடல் நொந்து நாமும்
எங்குதான் உம்மைக் காண்போம்
அன்புசார் உமது ஆன்மா
அவனடி சேர்க நன்றே!

தூய்மையை விரும்பும் நண்பா!
தூயதாய் எழுதும் நண்பா!
தூயதாம் நெறியைப் பேணத்
தொடங்கவே தீட்சை பெற்றாய்
தாயினைப் போன்ற எங்கள்
தமிழிற்கே தொண்டு செய்த
காயத் தாலுயிரை நீத்த
கவலையால் வருந்து கின்றோம்.

ஊழியர்கள்
வி. மு. பேரம்பலம் & கம்பனி
யாழ்ப்பாணம்.

———

# நன்றி

ராஜனின் விபத்தை அறிந்து யாழ். மருத்துவ மனைக்கு வந்து வேண்டிய உதவிகள் செய்த நண்பர்களுக்கும், அவரின் இறுதிக் கிரியை களில் கலந்துகொண்ட உறவினர்களுக்கும் நண் பர்களுக்கும், வர இயலாது கடித, தந்தி மூலம் அநுதாபம் தெரிவித்த ஏனையோருக்கும் எமது இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நவரத்தினமும் பாரியாரும்
ரஞ்சன் நவரத்தினம்
கந்தசாமியும் பாரியாரும்

230, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். 10-2-74

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்.